

புதுச்சேரி தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.காந்தியின் இல்லத் திருமண விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, திருமதி விசாலாட்சி பொன்முடி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

### சாமளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில்

# ரூ.4.54 கோடி மதிப்பீட்டில் 10 புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், செப். 22-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் தலைமையில், கோயம்புத்தூர் பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், சாமளாபுரம் பேரூராட்சி தலைவர் அ.செ.பழனிச்சாமி முன்னிலையில் சாமளாபுரம் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.4.54 கோடி மதிப்பீட்டில் 10 புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்தார்!

திருப்பூர் மாவட்டம், சாமளாபுரம் பேரூராட்சி அலுவலக வளாகத்தில் 16.09.2024 திங்கட்கிழமை அன்று மூலதன மான்ய திட்டத்தின் கீழ் ரூ.1.11 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடம், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் வேலாயுதம்பாளையம், சாமளாபுரம் மற்றும் பள்ளபாளையம் பகுதிகளில் தார் சாலை அமைக்கும் பணிகள், நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் வேலாயுதம் பாளையம், சாமளாபுரம் மற்றும் பெருமாம்பாளையம் சர்ச் வீதிகளில் தார் சாலை அமைக்கும் பணிகள், அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் செந்தேவிபாளையம் அம்பேத்கார் நகரில் கான்கீரிட் சாலை அமைக்கும் பணி மற்றும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.77.88 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.3ல் பள்ளபாளையம் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம், பரமசிவம்பாளையம் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம், வார்டு எண். 7ல் பெருமாம்பாளையம் பகுதியில் சமுதாயக் கழிப்பிடம், வார்டு எண்.12ல் சாமளாபுரம் கள்ளப்பாளையம் செல்லும் வழியில் சமுதாயக் கழிப்பிடம், வார்டு எண்.1ல் சாமளாபுரம் குளத்தேரி பகுதியில் சமுதாயக் கழிப்பிடம், வார்டு எண்.15ல் அய்யன் கோவில் செல்லும் வழியில் சமுதாயக் கழிப்பிடம் கட்டும் பணிகள் என மொத்தம் ரூ.4.54 கோடி மதிப்பீட்டில் 10 புதிய திட்டப்பணிகளை மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் தலைமையில், கோயம்புத்தூர் பாராளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், சாமளாபுரம் பேரூராட்சி தலைவர் அ.செ.பழனிச்சாமி முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் துவக்கி வைத்தார்!

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், பல்லடம் நகர கழக செயலாளர் ந. ராஜேந்திரகுமார், சாமளாபுரம் பேரூர் கழக செயலாளர் ப.வேலுசாமி, துணை செயலாளர் ப.தியாகராசன், பேரூராட்சி செயல் அலுவலர் சிவக்குமார், துணைத் தலைவர் குட்டி வரதராஜன், வார்டு உறுப்பினர்கள் ப.பட்டீஸ்வரன், இ.நித்தியா ஆரோக்கிய மேரி, ச.மைதிலி, ப.வேலுசாமி, பா.மேனகா, இரா. கிருஷ்ணவேணி, ச.பூங்கொடி, பா.மகாலட்சுமி, து. கனகசபாபதி, ஜே. வினோஜ் குமார், நா. பிரியா, க.பெரியசாமி, ஆ.துளசிமணி, பல்லடம் இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் குமார், வார்டு செயலாளர்கள் மார்க்கெட் தங்கவேல், ரத்தினசாமி உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் துறை சார்ந்த அரசு அலுவலர்கள், கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தஞ்சையில் தி.மு.க. மகளிர் அணி – மகளிர் தொண்டரணி சார்பில்

# ‘கலைஞர் 100 வினாடி வினா’ போட்டி: கனிமொழி கருணாநிதி எம்.பி. தொடங்கி வைத்தார்!

## அமைச்சர்கள் அன்பில் மகேஸ்பொய்யாமொழி – கயல்விழி செல்வராஜ் பங்கேற்பு!

தஞ்சாவூர் , செப். 22 -

தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் கலைஞர் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், திராவிட இயக்க வரலாற்றையும் கொள்கைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் வகையில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் நடைபெறும் ‘கலைஞர் 100 வினாடி வினா’ போட்டியின் மண்டல அளவிலான இரண்டாம் கட்ட போட்டி தஞ்சாவூர் குருதயாள் சர்மா கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில், கனிமொழி கருணாநிதி எம்.பி கலந்துகொண்டு போட்டியைத் தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினராகப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டார். இந்த போட்டியினை திமுக சட்டத்துறை அணி இணைச் செயலாளர் கே.எஸ்.இரவிச்சந்திரன் (முன்னாள் எம்.எல்.ஏ.) தொகுத்து வழங்கினார்.

வினாடி வினா போட்டி, 18 வயதுக்குட்பட்டவர்கள் மற்றும் 18 வயதிற்கு மேலானவர்களுக்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு போட்டி நடத்தப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாகத் தஞ்சாவூர் மண்டலத்தில் (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை) ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த முதல் சுற்று இணையவழி போட்டியில் வெற்றி பெற்றவர்கள் பங்கேற்றனர். 18 வயதுக்குட்பட்ட பிரிவில் மயிலாடுதுறை அணி மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட பிரிவு (பொதுப் பிரிவு) திருவாரூர் அணி வெற்றிபெற்றது.

தமிழ் மொழி, இலக்கியம், திராவிட வரலாறு, கலைஞர் ஆற்றிய பணிகள் குறித்து வினாடி வினா கேள்விகளுக்கு ஆர்வத்துடன் போட்டியாளர்கள் பதில் அளித்தனர். இந்த வினாடி - வினா போட்டியில் பங்கேற்றவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

விழாவிற்கு பிறகு செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி எம்.பி. ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதற்கு அமைச்சரவைதான் ஒப்புதல் அளித்துள்ளது, நாடு ஒப்புதல் அளிக்கவில்லை. இதில் முதல்வரின் நிலைப்பாடு என்ன என்பது உங்களுக்குத் தெரியும் நிச்சயம் இதனை ஏற்றுக் கொள்ள முடியாது. அனைத்தையும் ஒரே நாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என நினைத்தால் மாநில உரிமைகள் கொஞ்சம் கொஞ்சமாகப் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சிப் பொறுப்பில் இருக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து வருடம் முடியாத அரசின் நிலை என்ன? ஒரே தேர்தலால் மக்களுக்கு வரும் பயன் என்ன? என எதுவுமே இல்லாமல் அவர்களுக்கு லாபம் தரக்கூடிய ஒன்று என எதை நினைக்கின்றனரோ, அதனைச் செய்துவிட நினைக்கின்றனர். அவர்களுடைய கருத்துகளைத் தொடர்ந்து மக்கள் மீது திணிக்க வேண்டும் என்று தான் எண்ணுகிறார்கள். ஜனநாயகத்திற்கும், மாநிலங்களுடைய உரிமைகளுக்கும் எதிராக இருக்கக் கூடிய எதையும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றார்.

இந்நிகழ்வில், தஞ்சாவூர் மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் துரை.சந்திரசேகரன், தஞ்சாவூர் தெற்கு மாவட்டச் செயலாளர் கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ., தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி. நீலமேகம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், தஞ்சாவூர் மாநகர்ச்சி துணை மேயர் அஞ்சுகம் பூபதி, தி.மு.க. மாநில மகளிர் அணி தலைவர் விஜயா தாயன்பன், திமுக மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், திமுக மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப. ராணி, திமுக மகளிர் அணி இணைச்செயலாளர் குமரி விஜயகுமார், தி.மு.க. மகளிர் தொண்டர் அணி இணைச்செயலாளர் தமிழரசி ரவிக்குமார் எம்எல்ஏ, மாநில மகளிர் அணி நிர்வாகிகள், மாநில தொண்டர் அணி நிர்வாகிகள், மாவட்ட மாவட்ட அணி நிர்வாகி கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த வினாடி வினா போட்டியை தி.மு.க. தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் தனது X தளத்தின் வாயிலாகத் தொடங்கி வைத்தார். ‘kalaingar100.co.in’ என்ற இணையதளத்தில் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று (கடந்த ஆண்டு) இணையவழி போட்டிகள் தொடங்கியது. முதல் சுற்று இணையவழி வினாடி வினா செப்டம்பர் 15, 2023 அன்று தொடங்கி அக்டோபர் 25, 2023 வரை நடைபெற்றது. 18 வயதிற்கு மேற்பட்டோருக்கான போட்டி மற்றும் 18 வயதிற்குட்பட்டோருக்கான போட்டிகளாக இரு பிரிவுகளாக நடைபெறும்.




அரியலூர் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், மாநில பிரச்சாரக்குழு செயலாளர் சேலம் சுஜாதா ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். உடன் மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மீனா, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.


